Registered as a news paper.

பக்கங்கள் எட்டு

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 20 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 06 (03.06.2006) சனிக்கிழமை இதழ் 245

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# ஒஸ்லோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பு

கிளிநொச்சி —

போர்நிறுத்த உடன்பாட்டின்படி கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக எதிர்வரும் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்பரென விடுதலைப் புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் கூறியுள்ளதாவது:-

ஒஸ்லோ பேச்சுக்களில் பங்கேற்பது என நேற்று முடிவு செய்துள்ளோம். ஆனால், ஒஸ்லோவில் கண்காணிப்புக் குழுவினரது பாதுகாப்புத் தொடர்பாக மட்டுமே பேச்சுக்கள் நடைபெறும். சமாதானப்பேச்சுக்கள் அல்ல.

ஐரோப்பியத் தடை தொடர்பாக எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டையும், இந்தத் தடையானது சமாதான முயற்சியை பாதிக்கும் என்பதையும் நோர்டிக் நாடுகள் மற்றும் அனுசரணையாளர்களிடம் எமது குழுவினர் எடுத்துக் கூறுவர் என அவர் மேலும் தெரிவித்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்லோ மாநாட்டில் புலிகள் பங்கேற்பது சமாதான முயற்சிக்கு நல்ல அறிகுறி!

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொழும்பு —

ஒஸ்லோவில் எதிர்வரும் 8, 9 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கண்காணிப்புக்குழு மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்கேற்க முன்வந்தமையானது - சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்துக்கு சிறந்த அறிகுறியென போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்ரயர் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)

# பாரிய அரசியல் மாற்றம் ஏற்படாவிடின் இராணுவ உதவிகள் நிறுத்தப்படும்!

## நெதர்லாந்து தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு —

இலங்கையில் பாரிய அரசியல் மாற்றத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தாவிட்டால் - சர்வதேச நாடுகளின் அனைத்து நிதி உதவிகளும் நிறுத்தப்படுமென இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் வன்டி ஜித் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியாக உள்ள வன்டி ஜித் - கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சமாதான முயற்சிகளை மீண்டும் தொடங்க மறுப்பதால் இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சர்வதேசரீதியாக ஓரங்கட்டப்படும் நிலை உருவாகியுள்ளது.

நாம் வெறும் ராஜதந்திர மொழியில் மட்டும் கேட்டுக்கொள்ளவில்லை. பேச்சுக்களைத் தொடங்க மறுத்தால் சர்வதேச சமூகத்தின் ஆதரவு கைவிடப்படும். இதுதான் இரு தரப்பினருக்குமான ஒரு கடும் நிலையாக நாம் கருதுகிறோம். (08 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் தொடர்புகள் தொடர்ந்தும் பேணப்படும்

## நோர்வே அறிவிப்பு

ஒஸ்லோ —

விடுதலைப் புலிகள்மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தாலும், சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்படுவது தொடருமென நோர்வே தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நோர்வே பிரதமர் ஜேன்ஸ் ஸ்ரோலன் பேர்க் நேற்று தெரிவித்ததாவது;-

கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை அரசாங்கமும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டன் கடற்படைத் தளபதி

# இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டத்துக்கு

# பிரிட்டன் கடற்படைத் தளபதி இலங்கைக்கு 4 நாள் விஜயம்



கொழும்பு —

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு பிரித்தானியக் கடற்படைத்தளபதி அட்மிரல் ஜொனதன் பிராங் நேற்று அதிகாலை கொழும்பு வந்தடைந்தார்.

கொழும்பு வந்த பிரித்தானிய கடற்படைத் தளபதியை வரவேற்பதற்கான விசேட நிகழ்வுகள் கடற்படைத்தலைமையகத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் போது கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட பிரித்தானியக் கடற்படைத் தளபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கிக் கௌரவித்தார்.

பிரித்தானியக் கடற்படைத் தளபதிக்கான இராணுவ அணி வகுப்பு (08 ஆம் பக்கம் பார்க்க)


# இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டத்துக்கு அனைத்து கட்சி குழு அமைக்க முடிவு

## சர்வகட்சி மாநாட்டில் தீர்மானம்

கொழும்பு —

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அனைத்துக் கட்சிகள் அடங்கிய குழு அமைப்பதற்கு நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தவிர்ந்த நாடாளு (08 ஆம் பக்கம பார்க்க)



# புலிகளின் நிலைகள் மீது ஓமந்தையில் தாக்குதல்!

வவுனியா —

ஓமந்தை முன்னரங்க நிலைகளில் இருந்து நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகளை நோக்கி சுமார் அரை மணி நேரம் இராணுவத்தினர் தாக்குதல்களை நடத்தியதுடன் ஏ9 வீதி ஊடான போக்குவரத்துக்களையும் இரண்டு மணி நேரம் தடைசெய்தனர்.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் நின்ற பயணிகள் பாதுகாப்பு தேடி சிதறி ஓடினர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனிடையே வவுனியா - பூவரசன்குளம் பகுதியில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில்

# படையினர் நடத்திய தாக்குதல்களில் துணைப்படைவீரர், போராளி வீரச்சாவு

வவுனியா —

வவுனியா மாவட்டத்தின் இரு வேறு இடங்களில் படையினர் நடத்திய தாக்குதல்களில் போராளி ஒருவரும், தேசிய துணைப் படை வீரரும் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை நெடுங்கேணிப் பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி நடத்திய கிளைமோர் தாக்குதலில் தேசிய துணைப்படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்ததுடன் மற்றொருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவத்தில் வரோதயன் சிறிதரன் என்ற துணைப் படை வீரரே வீரச்சாவடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுக் காலை 7.30 மணியளவில் வவுனியா - காக்கையன்குளம் விடுதலைப் (08 ஆம் பக்கம் பார்க்க)

# பதில் துணைவேந்தராக பேராசிரியர் குமாரவடிவேல்

கொழும்பு —

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் அ.குமாரவடிவேல் நேற்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் பேராசிரியர் குமாரவடிவேல் பௌதீகவியல்துறை பேராசிரியராவார்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கான துணைவேந்தரை தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இவருக்கு அதிக வாக்குகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் துணைவேந்தராக வருவதற்கு யாழ்.பல்கலைக்கழக சமூகம் (08 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் மீன் உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்

குடாநாட்டில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக மீனவர்கள் இடம் பெயர்ந்தமையாலும், தொழிலைக் கைவிட்டமையாலும் மீன் உற்பத்தி வீழ்ச்சி கண்டிருப்பதாக மீன் பிடித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் 1990 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20 ஆயிரம் மெற்றிக் தொன் மீன் பிடிக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இடம் பெயர்ந்த மக்கள் தமது கிராமங்களுக்கு மீளத் திரும்பியதாலும், கடல்வலயச் சட்டம் தளர்த்தப்பட்டதாலும் மீன் உற்பத்தி அதிகரித்தது.

2002 ஆம் ஆண்டு 25 ஆயிரத்து 311 மெற்றிக் தொன்னாகவும், 2003 ஆம் ஆண்டு 21 ஆயிரத்து 206 மெற்றிக் தொன்னாகவும், 2004 ஆம் ஆண்டு 21 ஆயிரத்து 310 மெற்றிக் தொன்னாகவும் மீன் உற்பத்தி அதிகரித்து, 2005 ஆம் ஆண்டு 15 ஆயிரத்து 57 மெற்றிக் தொன்னாக வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்ட கடல் வலயச் சட்டம், மேலும் குடத்தனையில் இருந்து நாகர்கோவில் வரையும், தொண்டமனாறு தொடக்கம் மாதகல் வரையும், தென்மராட்சியில் - கச்சா யிலிருந்து பூநகரி வரையும் கடற் படையினரால் மீன் பிடிப்பதற்குத் தடை செய்யப்பட்டுள்ளமையால் மீன் உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


**ராஜா** யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



**பட்டியல்** (புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டும்

அஜித்குமார், சதா

**திருப்பதி**



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை


சூரியா - ஸ்ருதிகா மற்றும் விஜயகுமார் நடித்த

**ஸ்ரீ**

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30


யாழ். பல்கலைக்கழகத்தின் அழைக்கப்பட்ட கழகங்களுக்கான 30 ஓவர்களினைக் கொண்ட

## துடுப்பாட்டப் போட்டி - 2006



**பங்குபற்றும் அணிகள்:**

1. யாழ். பல்கலைக்கழக அணி
2. பற்றீசியன் விளையாட்டுக்கழகம்
3. சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம்
4. ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம்.

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்

| நேரம் | 03.06.2006 | 10.06.2006 | 11.06.2006 | 18.06.2006 |
|---|---|---|---|---|
| 8.30 | சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் Vs யாழ். பல்கலைக்கழக அணி | சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் Vs ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் | யாழ்.பல்கலைக்கழக அணி Vs ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் | இறுதி ஆட்டம் |
| 12.30 | ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் Vs பற்றீசியன் விளையாட்டுக்கழகம் | யாழ்.பல்கலைக்கழக அணி Vs பற்றீசியன் விளையாட்டுக்கழகம் | சென்றலைற்ஸ் விளையாட்டுக்கழகம் Vs பற்றீசியன் விளையாட்டுக்கழகம் | |

விளம்பர அனுசரணை: நமது ஈழநாடு

# அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை

யாழ்ப்பாணம்

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் உள்ள கிளைகளில் - 31.12.2005 ஆம் திகதிக்கு முன் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் இன்று தொடக்கம் ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் யாழ். பிராந்திய கிளைகளிலும்,

எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், 11 ஆம் திகதி நெல்லியடி கிளையிலும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக் கிரியைகளும்

மண்ணில் 20 - 05 - 1968



விண்ணில் 17 - 05 - 2005

## அமரர் திரு.கணேசமூர்த்தி காந்தரூபன் (பாபு)


கண்ணீரில் ஓராண்டு கரைந்து மறைந்ததப்பா
எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்களுடைய நினைவுகளே எம்மையிங்கு ஆளுதப்பா
இடைநடுவே தவிக்கவிட்டு ஏனப்பா மறைந்தீர்கள்
நினைவுகளில் வேகுகின்ற நெஞ்சங்கள் இங்கிருக்க
கூடு களைந்த குருவிகளாய் நாங்களிங்கே
கண்ணுக்குள் நின்றாடி கனவுகளில்
எம்மனதில் வாழந்திடுவீர்!
எம்முயிர் உள்ளவரை உறுதுணையாய்
நீங்கள் எம்மை வழிநடத்த
வேண்டுமென்று இறைவனை பிரார்த்திக்கின்றோம்!

04.06.2006 ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குபற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயறும்
மனைவி, மகள், மகன் (இன்பருட்டி)

(சி-5372)

# மரண அறிவித்தல்



பிரபல தொழில் அதிபரும், R.V.G.பீடி கொம்பனி, R.V.G மருந்தக ஸ்தாபகரும்,

## இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல தொழில் அதிபரும், R.V.G. பீடிக் கொம்பனி, R.V.G மருந்தக ஸ்தாபகருமான இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (01.06.2006) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமிப்பிள்ளை - இராசரத்தினம் அவர்களின் அன்பு மகனும், அமரர் சிவசுப்பிரமணியம் - கோசலை அம்மாள் தம்பதியினரின் அன்பு மருமகனும், ரூபசவுந்தரி அம்மாளின் பாசமிகு கணவரும், குமாரலிங்கம், சத்தியலிங்கம், ரேணுகாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுகி, வசந்தராணி, நிரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜயவர்மன், விஷ்ணுவரதன், அபர்னா, சஞ்ஜீவன், நிசாந்தன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆனந்தவேல், அமரர் நடனசிகாமணி, இரட்ணசிகாமணி, அமரர் சிவஞானசுந்தரம், கமலாம்பிகை, மகேஸ்வரி, தங்கேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், உருத்ரசிகாமணி, அமரர் இரத்தினவடிவேல், அருமைச்செல்வம் (தென்னிந்தியா, திருச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பிலுள்ள அன்னாரின் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (04.06.2006) காலை 8 மணிக்கு நடைபெற்று, காலை 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4/2, ஆர்தர்ஸ் பிளேஸ்,
கொழும்பு - 4
தொலைபேசி: - 2592934, 2596177

(2290)

**தகவல் :- குடும்பத்தினர்**

யாழ்.முகவரி:-
R.V.G. பீடி ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குவீதி, நல்லூர்.
தொலை.இல - 021 222 6806

# காட்டுமிராண்டிப் பழங்குடிகளாக ஜே.வி.பியும், ஹெல உறுமயவும்

## -எஸ்.பி.திஸநாயக்கா

கொழும்பு —

அதிகாரப் பகிர்வைக் கடந்த காலங்களில் எதிர்த்த காட்டுமிராண்டிப் பழங்குடிகளாக ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவினர் செயற்படுகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையைவிட சிறிய நாடுகளான சுவிஸ் மற்றும் பெல்ஜியம் போன்றவை கூட்டாட்சி மூலம் அரசியல் அதிகாரங்களை வெற்றிகரமாகப் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்தியாவை உதாரணமாக எடுத்துக் கொண்டால், உள்நாட்டு இனப் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு கண்டு 9.8 வீத பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது.

இலங்கையில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் தமிழர்களையும், முஸ்லிம்களையும் இதர சிறுபான்மையினரையும் சமமாக நடத்தத் தயாராக இல்லை. காட்டுமிராண்டிப் பழங்குடிகளும், சர்வாதிகாரிகளும்தான் கடந்த காலங்களில் அதிகாரப் பகிர்வை எதிர்த்தனர். தற்போது அத்தகைய நிலைமை உள்ளது.

தேர்தலில் ஒப்புக்கொண்டபடி மகிந்த ராஜபக்ஷவும் அனைத்து இனத்தவரையும் சமமாக நடத்தவில்லை.

வன்முறைகளுக்கு மகிந்த ராஜபக்ஷவும் பொறுப்பு என்று சர்வதேச சமூகம் குற்றம்சாட்டியுள்ளது. இந்த நிலைமையில் போர் வெறியர்களின் மறைமுகத் தலையீடின்றி ஆதரவை நிராகரித்துவிட்டு, அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை நாம் கேட்டுக்கொள்கிறோம்.

இணைத் தலைமை நாடுகள், ஐ.நா மற்றும் இந்தியா ஆகியவை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கொள்கைகளைப் பாராட்டி ஆதரவு தெரிவித்தன. நாடு பிளவுபடாமல் தடுக்க வேண்டுமானால், அதிகாரப் பகிர்வு அவசியம்.



மாகாண சபைகள் என்று உருவாக்கப்பட்டதோ அப்போதே இலங்கை ஒற்றையாட்சித் தன்மையை இழந்துவிட்டது எனத் தெரிவித்தார்.

# வெற்றிடங்களின்படியே ஆட்சேர்ப்பு நிகழவேண்டும்

## நிதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு —

அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டே அரசசேவையில் ஆட் சேர்ப்பு நிகழவேண்டுமென நிதிய மைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தர நிறுவனங்களின் தலைவர்களுக்கு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

நிறுவனமொன்றுக்கு ஆட்சேர்ப்பு செய்யவேண்டுமெனில், அதுகுறித்து முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என இந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# அரச அதிபராகப் பதவியேற்பு

திருகோணமலை —

திருகோணமலை மாவட்ட புதிய அரசாங்க அதிபராக மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா கடந்த முதலாம் திகதி உத்தியோகபூர்வமாகப் பதவி ஏற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிபார்சின் பேரிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளுடன் கலந்துரையாடுவது சிறந்தது என்கிறார் கொகன்ன



கொழும்பு —

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தாது இருப்பதைவிட, அவர்களுடன் கலந்துரையாடுவது சிறந்தது என அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை ஜெனிவாப் பேச்சுவார்த்தையில் மீண்டும் பங்குபற்ற வைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் தொடர்ந்து ஈடுபடும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள கண்காணிப்புக் குழுவின் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே அழைப்பு விடுத்துள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

ஒஸ்லோவில் நடைபெறவுள்ள சந்திப்பின் போது நாங்கள் போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகவோ, பேச்சுவார்த்தை குறித்தோ பேசப் போவதில்லை. அங்கு கண்காணிப்பு தொடர்பாகவும், கண்காணிப்பாளர்களின் செயற்பாடுகள் தொடர்பாகவுமே கலந்துரையாடப்படும்.

விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தையில் மீண்டும் பங்குகொள்ளச் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறோம்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என நாம் நம்புகிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலம் பெயர்ந்த மக்களால் கறுப்புப் பட்டி போராட்டம்

கொழும்பு —

விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையைக் கண்டித்து தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாட்டில் கறுப்புப் பட்டி அணிந்து எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி புலம் பெயர் நாடுகளில் வீட்டை விட்டு வெளியில் செல்லும் ஈழத்தமிழர்கள் அனைவரும் கறுப்புப் பட்டி அணிந்தவாறு - வேலைத் தளங்கள், பாடசாலைகள் செல்வதென முடிவெடுத்துள்ளனர். இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து மூன்று அல்லது ஐந்து நாட்களுக்கு தொடர்ச்சியாக முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒருபக்கச் சார்பான முடிவையும், நீதி தவறிய செயலையும், தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்தும் உலகில் உள்ள ஏனைய மக்களுக்கு எடுத்துரைக்கும் ஒரு அடையாளப் போராட்டமாக இது உருப்பெறவுள்ளது.

இதேவேளை, புலம் பெயர் நாடுகளில் தமிழர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கையைக் கண்டிப்பதோடு அனைத்து தடைகளிலிருந்தும் விடுபட்டு தமிழர் தாயகத்தை வென்றெடுக்கும் பிரார்த்தனை நிகழ்வுகளும் மதவேறுபாடின்றி, இந்து ஆலயங்களிலும், கத்தோலிக்க தேவாலயங்களிலும் செய்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

# போதை தரக்கூடிய உற்பத்தி பொருட்களின் விளம்பரத்துக்கு தடை விதிக்க நடவடிக்கை

கொழும்பு —

சிகரெட், புகையிலை மற்றும் போதை தரக்கூடிய உற்பத்திகள் தொடர்பான விளம்பரங்களுக்கு அரசாங்கம் தடை விதிக்கவுள்ளது.

இத்தகைய விளம்பரங்களைப் பிரசுரிப்பவர்களுக்கு 20 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கும் வகையில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் தண்டனையானது - பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் உட்பட பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி, வானொலி போன்ற இலத்திரனியல் ஊடகங்களுக்கும் பொருந்தும்.

கல்வி, கலாசாரம், சமூகம் மற்றும் விளையாட்டுத்துறை நடவடிக்கை சம்பந்தமாகப் புகையிலை மற்றும் மதுசாரா நிறுவனங்களின் அனுசரணையைப் பெற்றுக்கொள்வதும் தடைசெய்யப்படவுள்ளது.

# ஈழத்தமிழர் போராட்டத்துக்கு கருணாநிதி பங்களிப்பை அளிக்கத் தவறக் கூடாது

## சென்னை மாநாட்டில் தீர்மானம்

சென்னை —

ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் போராட்டத்தில் தனது பொறுப்பு மிகுந்த பங்களிப்பை அளிக்கத் தமிழக அரசு குறிப்பாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தவறக்கூடாது என்று சென்னையில் நடைபெற்ற ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திராவிடர் கழகத்தின் சார்பில் சென்னை வேப்பேரி பெரியார் திராவிடர் கழகத் திடலில் நேற்று முன் தினம் ஈழத் தமிழர் பாதுகாப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் கோ.க. மணி, கவிஞர் அறிவுமதி, பேராசிரியர் சுப.வீரபாண்டியன், இயக்குநர் சீமான் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் -

இலங்கைத் தீவில் சில காலம் அமைதியான ஒரு சூழல் நிலவி வந்தபோதிலும் தற்போது ஜனாதிபதியாக உள்ள ராஜபக்ஷ ஆரம்பம் முதலே கூட்டாட்சி அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்று அறிவித்ததன் மூலம் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கீழ் ஈழத் தமிழர்களை நசுக்குவது என்ற தன் இனவாத உணர்வுகளை மறைமுகமாக வெளிப்படுத்திக் கொண்டுள்ளார்.

ஈழப்போராளிகளில் துரோகிகளை உருவாக்குவதும் ஊக்குவிப்பதும் ஆங்காங்கே இராணுவத்தை ஏவி அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்வதுமான பாசிச போக்கில் ஒரு பக்கம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாத அரசு, இன்னொரு பக்கத்தில் இந்தியாவுடன் உறவு கொண்டுள்ளது போல பாவனை காட்டி வருகிறது. அத்துடன் இந்தியாவின் அனுசரணையோடு தான் காரியங்கள் நடப்பது போல ஒரு நயவஞ்சக நாடகத்தை உலகுக்குக் காட்டியும் வருகிறது. தமிழகத்துக்கு இலங்கையிலிருந்து அகதிகள் வருவது தினம் தினம் அதிகரித்து வருகிறது.

இந்தச் சூழ் நிலையில் இந்திய அரசு வேடிக்கை பார்ப்பது வேதனைக்குரியது. இலங்கை அரசுக்குக் குறைந்த பட்சம் எச்சரிக்கையாவது தெரிவிக்க வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு எந்த வகையிலும் துணை போகக் கூடாது என்றும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# மகிந்த கோட்பாட்டுக்கு ஜே.வி.பி கடும் எதிர்ப்பு

கொழும்பு —

ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காணப்படும் என்று கூறிவிட்டு, "பிளவு படாத தேசம்" என்னும் கோட்பாட்டை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்துவதற்கு ஜே.வி.பி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்துக்கு அரச சமாதான செயலகம் சார்பில் ஜே.வி.பிக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தில் "நாடு பிளவு படாத வகையிலான கூடுதலான அதிகாரப் பகிர்வு" குறித்து இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே ஜே.வி.பி இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஒற்றையாட்சியின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று மகிந்த ராஜபக்ஷ கூறிவந்தார். தற்போது பிளவுபடாத தேசம் என்று கூட்டாட்சியை மாற்று சொற்களினூடே முன்வைக்கிறார். அதை நாம் எதிர்க்கிறோம் என்று ஜே.வி.பியின் பேச்சாளர் தெரிவித்தார்.

இத்தகைய தீர்வு குறித்து விவாதிக்கப்படும் சர்வ கட்சிக்கூட்டத்தில் ஜே.வி.பி கலந்து கொள்ளாது என்று மகிந்த ராஜபக்ஷவுக்கும், சமாதான செயலகத்துக்கும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சமாதான செயலகம் அனுப்பியிருக்கும் கடிதத்தின் சாராம்சம் குறித்து ஜே.வி.பி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு தொலைபேசியூடாக மகிந்த ராஜபக்ஷ விளக்கம் அளித்தார் என்றும் ஜே.வி.பி பேச்சாளர் தெரிவித்தார்.

சமாதான செயலகம் அனுப்பியிருக்கும் தவறான கடிதத்தை திரும்பப் பெற்று, புதிய கடிதத்தை அனுப்ப வேண்டும் என்று மகிந்தவிடம் ரில் வின் சில்வா கேட்டுக்கொண்டார்.

சமாதான செயலகத்தின் புதிய கடிதம் திருப்தியளிப்பதாக இருந்தால் மட்டுமே, சர்வகட்சிக் கூட்டத் தில் பங்கேற்பதாக ஜே.வி.பி தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மேலும் பல நாடுகள் புலிகளை தடை விதிக்க வேண்டுமாம்!

## மகிந்த வேண்டுகோள்

கொழும்பு —

ஐரோப்பிய ஒன்றியத் தடையைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலி களை மேலும் பல நாடுகள் தடை செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள்விடுத்தார்.



ஏசியன் வோல் ஸ்ற்றீட் ஜேர்னல் என்ற இதழுக்கு மகிந்த ராஜபக்ஷ அளித்த நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளுக் குப் பணமும், ஆயுதங்களும் கிடைப் பதை வெளிநாட்டு அரசாங்கங்கள் தடுக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தான், கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசிய குடியரசு நாடுகளிலிருந்து ஆயுதக் கொள்வனவை விடுதலைப் புலிகள் மேற்கொள்வதை அந்த நாட்டு அரசாங்கங்கள் முறியடிக்க வேண்டும்.

தாய்லாந்திலிருந்து மேலதிகமான ஆயுதக் கொள்வனவை விடுதலைப் புலிகள் மேற்கொள்கின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத் தடை யைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடு களும் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்க வேண்டும்.

நான் அமைதியின் மனிதன். போரின் மூலம் தீர்வுகாண விரும்பவில்லை. அமைதி முயற்சிகளையே நான் விரும்புகிறேன் என அவர் தெரிவித்தார்.

# யுனிசெப், எஸ்.சி.எவ் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!




கிளிநொச்சி

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் அண்மைக்காலத்தில் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டு வரும் தமிழ்ச் சிறுவர்களின் நிலை தொடர்பான சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நடைபெற்றது.

யுனிசெப் தலைவர் ஜோவன்னாவன் - கொர்ப்பென் சிறுவர் பாதுகாப்பு நிதிய தலைவர் றிச்சர்ட் மோவர், யுனிசெப் கிளிநொச்சி செயலகப் பொறுப்பாளர் பெனி புறூன் ஆகியோர் கடந்த புதன்கிழமை காலை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்தனர்.

போர்நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள காலப்பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படுகொலை செய்யப்பட்ட, படுகாயமடைந்த மற்றும் காணாமல் போன சிறுவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலை இரு அமைப்புகளின் தலைவர்களிடமும் தமிழ்ச்செல்வன் கையளித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்கும் சமூக நல அமைப்புகளின் காரியாலயங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் பற்றியும் இந்தச் சந்திப்பில் விவாதிக்கப்பட்டது.

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாகத் தொடரும் ஆயுதப் போரில் விடுதலைப் புலிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மனித உரிமை அமைப்பு உறுப்பினர் மீதோ அல்லது அவர்களது காரியாலயங்கள் மீதோ எவ்வித தாக்குதலையும் மேற்கொண்டதில்லை என்பதை சுட்டிக் காட்டிய தமிழ்ச்செல்வன் - தொடர்ந்தும் இந்த விடயத்தில் 100 வீத ஒத்துழைப்பை தமது அமைப்பு வழங்குமென உறுதியளித்தார்.

விடுதலைப் புலிகளின் சார்பில் சிறுவர் பாதுகாப்பு மையத்தின் உறுப்பினரும், விடுதலைப்புலிகளின் சர்வதேச தொடர்பு நிலையத்தின் பொறுப்பாளருமான தியாகராஜா, சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் உட்பட சிறுவர் பாதுகாப்பு மையத்தின் சில உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# பல்கலை மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல்!

வட்டக்கச்சி

கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக சிரேஷ்ட மற்றும் புதுமுக மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் புதிதாக பல்கலைக்கழகங்களில் பதிவை மேற்கொண்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் த.முரளிதரன் தெரிவித்தார். (09)

# மேலும் 102 அகதிகள் தமிழகம் சென்றனர்

மன்னார்

தமிழ்நாட்டுக்கு நேற்றுமுன் தினமும் 102 ஈழத் தமிழர்கள் அகதிகளாக சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திருகோணமலை திருக்கடலூர், அலஸ் தோட்டம், சல்லிச்சாம்பல் தீவு, நிலாவெளி மற்றும் வவுனியா பகுதியில் வசித்த 29 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேர் ஆறு படகுகளில் தனுஸ் கோடி அரிச்சல் முனை கோதண்டராமர் கோயில் கடற்கரைக்கு வந்த னர்.

தனுஸ்கோடி பொலிஸார் இவர்களை விசா ரணை செய்து மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

நேற்றுமுன்தினம் வந்த அகதிகளில் போலியோவினால் பாதிக்கப்பட்ட திருக்கடலூரைச் சேர்ந்த ரூபாதேவி (வயது 21) கால் ஊனமுற்ற நிலையில் ஊனமுற்றவர்களுக்கான சைக்கிளில் சென்றிருந்தார்.

அகதிகளாகச் சென்ற சகாயராஜ், கந்தசாமி ஆகியோர் கூறியதாவது -

திருகோணமலையிலிருந்து குடும்பத்துடன் வந்து படகு கிடைக்காததால் கடந்த 10 நாட்களாக பேசாலையில் தங்கியிருந்தோம்.

எங்களைப் போல ஏராளமானோர் பேசாலையில் தங்கியுள்ளதால் காய்கறிகள், அரிசி போன்றவை அதிக விலைக்கு விற்கப்படுகின்றது.

கத்தரிக்காய் ஒரு கிலோ ரூபா 80 வரை விற்கப்படுகிறது. இராமேஸ்வரம் வருவதற்கு முதலில் படகுக் கட்டணமாக ஒருவருக்கு 5 ஆயிரம் வாங்கிய மீனவர்கள் தற்போது 10 ஆயிரம் ரூபா வரை கட்டணம் வாங்குகிறார்கள்.

இராமேஸ்வரத்துக்கு இலங்கைத் தமிழர்கள் வரும் படகுகளை இந்திய கடற்படையினர் பறிமுதல் செய்வதாலேயே படகுக் கட்டணத்தை உயர்த்தியுள்ளனர்.

பணம் இல்லாமல் இங்கு வர முடியாத சூழ்நிலையில் பலர் பேசாலையில் காத்திருக்கின்றனர் என்று கூறினர்.

# அறநெறிப் பாடசாலை திறப்பு விழா நாளை!

வட்டக்கச்சி

இராமநாதபுரம் அருள்மிகு மாவடி ஸ்ரீ மாரி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை திறப்புவிழா நாளை காலை 11 மணிக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.தர்மசூரியர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகள், கிளிநொச்சி முருகன் ஆலய பிரதமகுரு சிவசிறி இரத்தினேஸ்வரக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம், கிளிநொச்சி திருநெறிக்கழகத் தலைவர் மகாலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (09)

# சமைத்த உணவு வழங்கல்

மன்னார்

திருகோணமலையில் இருந்து இடம்பெயர்ந்து தமிழகம் செல்வதற்காக மன்னார் வந்துள்ளவர்களில் பேசாலை சென்.மேரிஸ் பெண்கள் பாடசாலையில் 106 குடும்பங்களைச் சேர்ந்த 356 பேரும், தலைமன்னார் புனித லோறன்ஸ் வித்தியாலயத்தில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 186 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் மன்னார் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இவர்களுக்கு சமைத்த உணவை வழங்கி, பராமரித்து வருகின்றது.

இதேபோன்று மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள இலுப்பைக் கடவை நெற்றோ நிறுவனத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேருக்கும் இந்த சமைத்த உணவு வழங்கி பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மோ)

# போர்களில் சம்பந்தப்படாதவர்கள் கொல்லப்படுவதை கண்டிக்கிறோம்

## எம்.எஸ்.கருணாரெட்ணம் அடிகளார்

கிளிநொச்சி

போர்களில் சம்பந்தப்படாத, ஆயுதம்தாங்காத எவரையும் படுகொலை செய்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம் என வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் எம்.எஸ்.கருணாரெட்ணம் தெரிவித்தார்.

இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புத் தலைவரைச் சந்தித்து கலந்துரையாடிய பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து, எமது மக்களின் நிலையை எடுத்து விளக்கியுள்ளோம். போர்களில் சம்பந்தப்படாத, ஆயுதம் தாங்காத எவரையும் படுகொலை செய்வதை நாங்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அல்லைப்பிட்டி சம்பவம் தொடர்பான அறிக்கையைக் கண்காணிப்புக் குழுவினர் கோரியுள்ளனர். தற்பொழுது இடம் பெயர்ந்துள்ள அல்லைப்பிட்டி மக்களை மீளக் குடியமர்த்த போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கோரியுள்ளனர். நாங்கள் அதனை மறுத்துள்ளோம்.

இதுவரை காலமும் அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், புத்திஜீவிகள் எனப் பலர் இராணுவத்தினராலும், இராணுவத்தின் துணை ஆயுதக் குழுவினராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட கொலையாளிகள் எவரும் கைது செய்யப்படவுமில்லை, சட்டத்தின் முன்நிறுத்தப்படவுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலையிலிருந்து இடம்பெயர்ந்தோரை மன்னாரில் தங்கவைக்க நடவடிக்கை!

மன்னார்

திருகோணமலையில் இருந்து தமிழகம் செல்வதற்காக மன்னார் சென்றுள்ள தமிழ் அகதிகளை மன்னார் மாவட்டத்திலேயே தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

இந்த அகதிகளை திருகோணமலையில் உள்ள அவர்களின் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறு வட-கிழக்கு மாகாண ஆளுநர், மன்னார் மாவட்ட அரச செயலக அதிகாரிகளுக்கு மன்னார் மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி ஊடாக அறிவித்திருந்தார்.

சொந்த இடங்களில் தமது உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, தமது பாதுகாப்புச் சரியான முறையில் உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே, தம்மால் அங்கு திரும்பிச் செல்ல முடியும் என இடம்பெயர்ந்த மக்கள் உறுதியாக அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

பேசாலை சென்.மேரிஸ் மகா வித்தியாலயம், தலைமன்னார் சென்.லோரன்ஸ் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் திருகோணமலையைச் சேர்ந்த சுமார் 600 அகதிகள் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# படையினரின் வலிந்த தாக்குதல்; யுத்தம் ஏற்படவே வழிவகுக்கும்!

## கட்டளைத் தளபதி லோறன்ஸ்

வடமராட்சி கிழக்கு

வட போர்முனை முன்னரங்கப் பகுதிகளில் விடுதலைப் புலிகளைச் சீண்டும் வகையில் படையினர் செயற்பட்டு வருகின்றனர். ஒரு நாளில் மட்டும் இருதடவைகள் எம் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நாம் பலமான பதில் தாக்குதல் நடத்தும் கட்டத்தைப் படையினர் உருவாக்க முனைகின்றனர் என வட போர் முனைக் கட்டளைத்தளபதி லோறன்ஸ் தெரிவித்தார்.

படையினரின் சீண்டும் வகையிலான தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாகர் கோவில் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் மீது படையினர் ஊடுருவித் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவம் காலை 6.30 மணிக்கு நடைபெற்றது. அதேபோல பிற்பகல் 1.30 மணிக்கு அதே காவலரண் மீது படையினர் மீண்டும் தாக்குதல் நடத்தினர். அதனால் எமது தரப்பில் சில போராளிகள் காயமடைந்தனர். நாங்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பதில் தாக்குதலை நடத்தினோம்.

படையினரின் இத்தகைய ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் இங்கு பெரும் போர் வெடிக்கக் கூடிய நிலை மிக விரைவில் உருவாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மக்கள் தேசியக் கொடியை ஏற்றுவது படையினருக்கு ஆத்திரமூட்டுவதாகக்கூறி, அதனைப் போர் நிறுத்த மீறல் எனக்கூறும் கண்காணிப்புக்குழு - இந்தக் கள நிலைமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும் என எம்மைச் சந்தித்த கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தெளிவாக எடுத்துக்கூறியிருக்கிறோம்.

எங்களைச் சீண்டும் வகையில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குள்ளான காவலரண் பகுதிகளையும் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு காட்டியிருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போதையை ஏற்படுத்தும் பொருட்களுக்குத் தடை!

கிளிநொச்சி

தமிழீழ சுகாதார சேவையினரால் போதைத் தன்மையை ஏற்படுத்தும் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

லேகியம், பான்பராக் போன்ற போதைத் தன்மையை ஏற்படுத்தக் கூடிய பொருட்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுத்து வருவதற்கு நாளை மறுதினம் முதல் தடை விதிக்கப்படுவதாக தமிழீழ சுகாதார சேவையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையானது தமிழினத்தின் உரிமைகளை மறுப்பதாகும்

## பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம் —

விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருப்பது இறைமையுள்ள ஓர் இனத்தின் சுயாட்சி உரிமைகளை மறுதலிப்பதாகும். இது ஐ.நா சாசன விதிகளுக்கு முரணானதாகும் என யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் கண்டன அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ் மக்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளாவர். அவர்களது சுதந்திர தாகத்தை எந்த ஒரு நாடாலும் அடிபணிய வைக்க முடியாது. சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் ஊக்கமளிக்குமானால் அது தமிழினப் படுகொலைகளுக்கே வித்தாகிவிடும்.

படையினரின் அட்டூழியங்களால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். தமிழர் தாயகம் சிங்கள அரச பயங்கரவாத செயற்பாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது.

தமது உயிருக்கு உத்தரவாதமின்றித் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து உலக நாடுகளில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பை முறியடிக்கவும், தமிழர்கள் தமது நிலத்தில் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ்வதற்காக ஆக்கிரமிப்புப் படையினருக்கு எதிராகப் போராடி வருகின்றனர். தமிழர்களின் போராட்டத்துக்கு தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமை தாங்குகிறார்.

தமிழ் மக்களின் நீதியான போராட்டத்துக்குப் பல நாடுகள் ஆதரவு நல்கியுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள், போராளிகள், பொது மக்கள் உயிர்த் தியாகம் செய்தும், இரத்தம் சிந்தியும் தமிழீழ தேசம் உருவாக அனைவரும் ஒன்றுபட்டு நிற்கும் நிலையில் - ஐரோப்பிய ஒன்றியம் ஒருதலைப்பட்சமாக விடுதலைப் புலிகள் மீது தடை விதித்திருப்பது நீதி நெறிமறைக்கு அப்பாற்பட்ட வஞ்சகத்தனமான செயலாகும்.

இந்தத் தடை விதிப்பை ஐரோப்பிய ஒன்றியம் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

தடை நீக்கப்படாவிட்டால் அமைதி முயற்சிகள் பலவீனமடைந்து, இலங்கையில் மீண்டும் போர் மூளும் ஆபத்து ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதும், தமிழர்களின் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் பொது அமைப்புகள் மீதும் நம்பிக்கை ஏற்படும் விதத்தில் செயற்படாது போனால் அவர்கள் எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் நலன்களுக்காகத் தமிழர்கள் எப்போதும் பக்கபலமாக இருப்பார்கள்.

தமிழர்களின் உதவி அந்த நாடுகளுக்குத் தேவை என்பதைப் புரிந்து கொள்வார்களானால், எமது நிலையைப் புரிந்து கொள்வார்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம் —

தீவகம் கல்வி வலயத்தில் புதிதாக உள்வாங்கப்பட்ட ஆசிரியர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பின்பு ஒத்தி வைக்கப்பட்ட செயலமர்வு நாளை மறுதினம் ஊர்காவல்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

குறித்த ஆசிரியர்களை இந்தச் செயலமர்வில் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## அடையாள அட்டைகள் வந்துள்ளன

சாவகச்சேரி —

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

விண்ணப்பித்தவர்கள் தத்தமது கிராம அலுவலர் ஊடாக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## நல்லூர் பகுதியில் சுற்றி வளைப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். நல்லூர் பகுதியில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் பாரிய சுற்றி வளைப்புத் தேடுதலை மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் நண்பகலை வில் நல்லூர்ப் பகுதியில் ஏராளமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அந்தப் பகுதியிலிருந்து ஒவ்வொரு வீடுகளும் துருவித் துருவி சோதனையிடப்பட்டதாகத் தெரியவருகிறது.

யாழ். குடா நாட்டில் அண்மைக் காலமாக பரவலாக சுற்றி வளைப்புத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் பொது மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வேள்வி

நயினைதீவு —

நயினைதீவு தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த திருக்குளிர்த்தி பொங்கல் வேள்வி எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## நடைபாதை வியாபாரங்களால் வைத்தியசாலை வீதி நெரிசல்

கொக்குவில் —

யாழ். நகரில் நிலவும் அசாதாரண நிலையைப் பயன்படுத்தி நடைபாதை வியாபாரிகள் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள யாழ். முனீஸ்வரன் வீதி, முற்றவெளிப் பகுதிகளில் நடைபாதைக் கடைகளை நிறுவாமல் நெருக்கடி சூழ்ந்த யாழ். வைத்தியசாலை பகுதியை ஆக்கிரமித்து வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கும் இந்தக் கடைகள் இடையூறாக இருந்து வருகிறது.

நாட்டில் சட்டம், ஒழுங்கு அடிக்கடி சிதைந்து போவதால் வியாபாரிகள் அதனை வெகுவாகப் பயன்படுத்துவதைக் கடந்த சில வருடங்களாக குடாநாட்டு மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளுக்கு நிரந்தரத் தீர்வொன்றை நீதிமன்ற ஆணை மூலம் நிறைவேற்ற வேண்டிய காலம் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (206)

## வர்த்தக நிலையத்தில் பொருட்கள் அபகரிப்பு

யாழ்ப்பாணம் —

ஆனைக்கோட்டைச் சந்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் இரவோடு இரவாக உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

இந்தப் பகுதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தை நேற்றுமுன்தினம் இரவு உடைத்த திருடர்கள் - வர்த்தக நிலையத்தில் இருந்த அனைத்து பெறுமதி வாய்ந்த பொருட்களையும் அபகரித்து, வாகனம் மூலம் திருடிய பொருட்களைக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, திருடப்பட்ட வர்த்தக நிலையத்துக்கு அண்மையில் இராணுவ முகாம் ஒன்று இருந்த போதும் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக் காலமாக இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றபோதும் பொலிஸார் பாராமுகமாக இருந்து வருவது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

## மஹோற்சவம்

நல்லூர் —

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழாவில் - எதிர்வரும் 10 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## குருபூசை தினத்தை முன்னிட்டு போட்டிகளை நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம் —

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை, திருஞானசம்பந்தர் குருபூசை தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே சமயப் போட்டிகளை நடத்தவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் 1 ஆம், 2 ஆம் ஆண்டு மாணவர்கள் திருஞான சம்பந்தர்போல் ஆடை, சிவ சின்னங்கள் அணிந்து பாவனை செய்து, அவர் பாடிய தேவாரத்தில் ஒன்றைப் பண்ணுடன் பாட வேண்டும்.

மேல் வகுப்பு மாணவர்களுக்குத் திருஞானசம்பந்தர் வரலாறு பற்றிய விநாடி வினாப்போட்டிகள் நடைபெறவுள்ளதாக அறநெறிப் பாடசாலை அதிபர் கா.கணேசதாசன் தெரிவித்தார்.


## பொங்கல் உற்சவம்

பருத்தித்துறை —

மாதனை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் இந்த உற்சவத்தில் இறுதிநாள் 13 ஆம் திகதி விசேட பொங்கல் நடைபெறும்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பிர சித்தி பெற்ற இந்த ஆலயத்தில் பொங்க லன்று ஏராளமான பக்தர்கள் ஒன்றுகூடி நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்வது குறிப்பிடத்தக்கது.



யாழ். நகரப் பகுதியில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த மாநகரசபை நடவடிக்கை எடுத்தபோதும் இதன் பாவனை இன்றும் குறையாமல் உள்ளதற்குச் சான்றாக முனீஸ்வரன் வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் குவிந்துள்ள பொலித்தீன்களையே படங்களில் காண்கிறீர்கள்.

## ஆன்மீக யோகாப் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் —

யாழ். சாந்திகம் அமைப்பால் உடல், உள, சமூக, ஆரோக்கிய, ஆன்மீக யோகாசன பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் ஆரம்ப யோகா பயிற்சிகள், சுவாசப் பயிற்சிகள், உடலைத் தளர்த்தும் பயிற்சிகள், தியானப் பயிற்சிகள், சக்தி பரவ விடும் பயிற்சி, பவர் யோகா, கூட யோகா என்பவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

பயிற்சிக் காலம் 60 நாட்களாகும். பயிற்சிகள் யாவும் பெங்களூர் யோகா கேந்திர மருத்துவ வளாக சர்வதேச பாடத்திட்டத்துக்கு அமைவானதாகும்.

பயிற்சிபெற விரும்புவர்கள் - நிறைவேற்றுப் பணிப்பாளர், சாந்திகம், 8/1 கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல் லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பட்டபின் கல்வி டிப்ளோமா இறுதி பரீட்சை திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம் —

திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய பட்டப்பின் கல்வி டிப்ளோமா இறுதிப்பரீட்சை திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பரீட்சைகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

15.07.2006 - கல்வி அளவீடும் மதிப்பீடும், 16.07.2007 - ஒப்பீட்டுக் கல்வியும் பிரச்சினையும், 22.07.2006 - கல்வியியல் வழிநடத்தலும் ஆலோசனையும், 23.07.2006 - பாடவிதானமும் பயிற்சியும், கல்வியியல் முகாமைத்துவமும். 29.07.2007 - சிறுவர் உரிமை ஆரம்பக் கல்வி.

இந்தப் பரீட்சைகள் யாவும் யாழ். கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை இடம்பெறும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படுமெனவும், அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்களையும் பரீட்சைக்குத் தோற்றுமாறும் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி. ச.ஆ.ஞானேந்திரா தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை நான்கு



பெயர் : த.திலக்சனா
முகவரி : யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------------
முகவரி ----------------
பிறந்த ஆண்டு: ----------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------
பெற்றோர் ஒப்பம்

# வல்லரசுகளின் நலன்சார் மூலோபாயங்களுக்குள் பந்தாடப்படும் தமிழர்களின் 'சுயநிர்ணய உரிமை'

மேற்குலக நாடுகள் தங்கள் திருவாய் மலர்ந்து பேசி வரும் மனித உரிமை, ஜனநாயகம், நல்லாட்சி போன்ற கோட் பாடுகளினூடு பார்க்க அவற்றுக்கு எண்ணெய் மற்றும் கடற்பிராந்திய நலன்களே முதன்மையானவை என்பது இன்றைய உலக ஒழுங்கு உணர்த்தும் யதார்த்தமாகும்.



மொன்ரநீக்றோவின் விடுதலையின் பின்னர் அந்த நாட்டு மக்கள் மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கும் காட்சி.

தமிழ் அரசியல் தளத்தில் மாமனிதர் சிவராம், தமிழர்களுக்கு இந்த உண்மையை அடிக்கடி தெளிவுபடுத்தி வந்தார்.

இன்றைய புதிய உலக ஒழுங்கில், வல்லரசு நாடுகளும் அதன் அடிவருடிகளும் ஜனநாயகம், மனித உரிமை, நல்லாட்சி என்பவற்றை மட்டுமல்லாது 'பயங்கரவாதம்' என்ற சொல்லாடலையும் தமது பொருளாதார - பிராந்திய நலன்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி காய்கள் நகர்த்துகின்றன.

செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின்னர், பயங்கரவாதத்துக்கெதிரான போர்ப் பிரகடனத்துடன் அமெரிக்கா தலைமையில் மேற்குல நாடுகள் பெரும் போர் நடவடிக்கைகளை ஆரம்பித்தன. பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்து, ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும்,நல்லாட்சியையும் நிலை நாட்டுவதே தமது குறிக்கோள் என்ற சூளுரைப்புடன் பயங்கரவாதத்துக்கெதிரான மேற்குலகத்தின் அணிசேரல் நியாயப்படுத்தப்பட்டது. இந்த நியாயப்படுத்தலுக்கு ஊடகங்களின் பெரும் பங்கும் இருந்தது.

ஆனால், பயங்கரவாதத்துக்கெதிரான படையெடுப்புக்களின் விளைவுகள் என்னவென்பதையிட்டு இங்கு விபரிக்க வேண்டிய அவசியமில்லை. ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் நடந்தேறும் உயிரழிவுகளும், உடைமையழிவுகளும் விளைவின் அவலம் என்னவென்பதற்கான உரைகல்லாக அமைந்துள்ளன. அவை பயங்கரவாதத்துக்கெதிரான 'தர்மயுத்தத்தின்' சாயத்தை வெளுக்கச் செய்துகொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் மேற்குலகத்தின் மனித உரிமை முழக்கங்களும், ஜனநாயக வியாக்கியானங்களும் அடக்கு முறைக்குள்ளான மக்களின் உரிமைகளுக்காக உண்மையான கரிசனையுடன் முன்வைக்கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

அடிப்படை வாழ்வுரிமைக்காகவும், அரசியல் அபிலாசைகளுக்காகவும் போராடுகின்ற மக்களுக்கெதிராக - அந்த மக்களின் தலைமைத்துவத்துக்கெதிராக சமகாலத்தில் மேற்குலக நாடுகள் எடுக்கும் தீர்மானங்களும், நடவடிக்கைகளும் ஒடுக்குமுறையாளர்களுக்கு ( அரசுகளுக்கு) ஊக்கமளிப்பனவாகவே உள்ளன.

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் தமிழீழ விடுதப்புலிகளுக்கெதிரான பயணத்தடையை விதித்த ஐரோப்பிய ஒன்றியம், தற்போது விடுதலைப் புலிகளுக்கெதிரான தடை தொடர்பான உத்தேச தீர்மானத்தை வெளியிட்டு, பின்னர் மே 29 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் இணைத்துள்ளதான இறுதி அறிவிப்பை வெளியிட்டது.

இது ஏற்கனவே பலவீனப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை சீர்குலைக்கின்ற - மோசமான போர் அழிவுக்குள் இலங்கைத் தீவை இட்டுச் செல்கின்ற முடிவாகும்.

அத்துடன் போர் ஓய்வு அமுலில் இருக்கும் (ஆவணத்தில் மட்டுமே என்பது வேறு கதை) இன்றைய காலகட்டத்தில் கூட தமிழ் மக்கள் மீது கோரமான இனப்படுகொலைகளையும், அப்பட்டமான மனித உரிமை மீறல்களையும், தொடர்ச்சியாக கட்டவிழ்த்துவிட்டுள்ள இலங்கையின் பயங்கரவாதத்துக்குத் துணை போகின்ற நடவடிக்கையே இதுவாகும்.

தமிழர்களுக்குத் தனது போர் முகத்தை வெளிப்படுத்துகின்ற இலங்கை அரசு, அனைத்துலக சமூகத்துக்கு சமாதானத்தின் மீது தான் பற்றுறுதி கொண்டுள்ளதாகக்காட்டி, இரட்டை முகங்களுடன் செயற்படுகின்றது. புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்கான அழுத்தம் தான் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை என்ற வாதம் ஐரோப்பிய ஒன்றியத் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்ட ஜெனிவா பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு புலிகள் ஒருபோதும் மறுக்கவில்லை. இலங்கை அரசாங்கமும், படைத்தரப்புமே இரண்டாம் கட்ட ஜெனீவா பேச்சுக்களில் புலிகளைப் பங்கேற்காமல் செய்வதற்குரிய முட்டுக்கட் டைகளை போட்டன.

அவற்றைப் புறந்தள்ளிப் பார்க்கும் போது கூட, எந்த அடிப்படையில் இலங்கை அரசுடன் இனிப் பேசுவது என்ற கேள்வியும் இயல்பாகவே எழுகின்றது. ஐம்பது மாதங்களுக்கு மேலாக, நாடு நாடாகப் பறந்து பறந்து தமிழர் தரப்பு, சிங்கள அரசுடன் பேசிக் கண்ட பயன் என்ன? எட்டப்பட்ட இணக்கப்பாடுகளில் ஏதாவதொன்று உருப்படியாக நிறைவேற்றப்பட்டதா?

மகாவம்ச மனோ நிலையில் ஊறிய சிங்களப் பேரினவாதம், தமிழ் மக்களுக்கு எந்தவித தீர்வையும் முன்வைக்கப் போவதில்லையென்பதை நான்கு ஆண்டுகளாக இடம் பெற்ற பேச்சு வார்த்தைக் காலத்தின் முக்கிய நிகழ்வுகளையும் (எட்டப் பட்ட இணக்கப்பாடுகளை) அவற்றுக்கு நேர்ந்த கதியையும் ஒருகணம் மீட்டுப் பார்ப்பதன் மூலமே தெளிவாகப் புரிந்த கொள்ள முடியும்.

நிரந்தரத் தீர்வுக்கான நகர்வின் முதற்படியாக இயல்பு நிலையை ஏற்படுத்துதல் என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிறுவப்பட்ட 'சிரான்' கட்டமைப்பு இலங்கைத் தரப்பால் செயலிழக்கச் செய்யப்பட்டது. தொடர்ந்து ISGA என அறியப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அலகு சந்திரிகா அரசால் நிராகரிக்கப்பட்டது. அடுத்ததாக அரசியல் ரீதியான அதிகாரங்கள் ஏதுமற்ற, மனிதநேயப் பணிகளை மட்டும் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட P - TOMS என அறியப்பட்ட சுனாமி பொதுக்கட்டமைப்புக்கு கடும் போக்கு இனவாத சக்திகளின் கடும் பிரயத்தனத்தில் உச்ச நீதிமன்றத் தடையுத்தரவு கொண்டுவரப்பட்டது.

எனவே, இலங்கை அரசு இயந்திரம், அதனை இயக்குகின்ற சிங்களக் கடும்போக்காளர்கள் (சிங்களத் தலைமைகள்) தமிழ் மக்களுக்கு குறைந்தபட்சத் தீர்வைக் கூட தரத் தயாரில்லை என்பது நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகள் மூலம் பல தடவைகள் மெய்ப்பிக்கப்பட்டு விட்டன.

சுனாமிப் பொதுக்கட்டமைப்பையே ஏற்காத சிங்களம், எங்ஙனம் தமிழ் மக்களின் அரசியல் உரிமையை ஏற்கும்? அவசர மனிதாபிமான உதவிகளையே பகிர முன்வராத சிங்களம் எங்ஙனம் அதிகாரப் பரவலாக்கலை ஏற்கும்? இந்த யதார்த்தத்தை அனைத்துலக சமூகம் புரிந்துகொள்ளவில்லை என்று சொல்வதற்கில்லை. சிங்களத்தைப் பற்றிப் புரிந்து கொண்டதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்வதற்கு அனைத்துலக சமூகம் தயாரில்லை என்பதே யதார்த்தமாக இருக்க முடியும்.

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கைத் தீவின் அமைவிடம், வல்லரசுகளின் நலன்களுக்கு இன்றியமையாததாக இருக்கின்றது. இந்தப் புறச்சூழலில் இலங்கைத்தீவில் தமது செல்வாக்கை நிலைநாட்டத் துடிக்கும் நலன்சார் மூலோபாயமே தமிழர் போராட்டத்துக்கெதிரான வல்லரசுகளின், குறிப்பாக அமெரிக்காவின் நிலைப்பாட்டுக்குரிய காரணியென ஆய்வாளர்கள் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்தியா மற்றும் சீனாவுக்கும் இதே பிராந்திய நலன் சார் அக்கறைகள் உண்டு.

அமெரிக்காவுக்கு ஒத்தூதும் மேற்குலக (ஐரோப்பிய) நாடுகளும் தமது பொருளாதார நலன்களுக்கு ஏற்றால்போல் 'சுயநிர்ணய உரிமையை' மாறி, மாறி கையாள்கின்றன. காய்களை நகர்த்துகின்றன. அவை இரட்டை முகங்களுடன் செயற்படுகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இரட்டை முகத்தை வெளிப்படுத்தும் சமகால அரசியல் மாற்றமொன்றை இந்த வேளையில் நோக்குவது அவசியமானதாகிறது. முன்னாள் யூகோஸ்லாவியா மீது, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் கையாண்டு வரும் மூலோபாயத்தையும், தமிழீழம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் கையாண்டு வரும் அணுகுமுறையையும் ஒப்பீடு செய்வதன் மூலம் மேற்குலக சமூகத்தின் இரட்டை நிலையை இலகுவில் விளங்கிக் கொள்ள முடியும்.

குறுவாட்சியா, மசடோனியா, ஸ்லோவேனியா, ஸ்லோவாக்கியா, போஸ்னியா, சேர்பியா - மொன்ரநீக்றோ ஆகிய ஆறு குடியரசுகளைக் கொண்டிருந்த பலமான பல்தேசிய நாடாகவிருந்த யூகோஸ்லாவியா அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் சவாலாக வளர்ச்சி கண்டுவிடும் என்ற அச்சத்தால், யூகோஸ்லாவிய குடியரசுகள் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து செல்வதை அமெரிக்க - ஐரோப்பிய சமூகங்கள் ஊக்குவித்தன. உதவிகளையும் வழங்கின.

சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்குப் பின்னர் யூகோஸ்லாவிய குடியரசுகள் ஒன்றன் பின் ஒன்றாக தனித்தனி அரசுகளாகின, இந்த உடைவுக்கும் அமெரிக்க - ஐரோப்பிய சமூகங்கள் பின்னணிச் சக்திகளாக இருந்து காய்களை நகர்த்தின. இவை பிரிந்து செல்வதைத் தடுப்பதற்கு ஸ்லோவடான் மிலோசவிக் பெரும் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு, பல நூறாயிரம் குறுவாட்சிய மற்றும் பொஸ்னிய மக்கள் கொன்றெழிக்கப்பட்டன.

இங்கு ஒப்பீடு செய்ய முனைவது யூகோஸ்லாவிய குடியரசுகளில் எஞ்சியிருந்த சேர்பிய - மொன்ரநீக்றோ குடியரசில் அண்மையில் நிகழ்ந்த அரசியல் மாற்றமாகும். மே மாதம் 19 ஆம் திகதி சேர்பியாவிலிருந்து மொன்ரநீக்றோ பிரிந்து செல்வதற்குரிய கருத்து வாக்கெடுப்பு மொன்ரநீக்றோஜியன் மக்கள் மத்தியில் நடத்தப்பட்டது. அந்தக்கருத்து வாக்கெடுப்பில் 55.5 வீத மக்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்ததன் விளைவாக மொன்ரநீக்றோ என்ற தனிநாடு பிறந்துள்ளது.

இந்தப் பிரிந்து செல்லலுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும பெரும் பங்குண்டு. இவ்வாறானதொரு கருத்து வாக்கெடுப்பு மூலம் மொன்ர நீக்றோ பிரிந்து செல்வது தொடர்பான மக்கள் ஆணை பெறப்பட வேண்டும் என்ற இணக்கப்பாடு சேர்பிய - மொன்ரநீக்றோ குடியரசுகளுக்கு மத்தியில் ஏற்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுசரணை வழங்கியிருந்தமை இங்கு கவனிப்புக்குரியதாகும். மொன்ரநீக்றோஜியன் மக்கள் மத்தியில் தனிநாடு தொடர்பான கருத்துப் பிரசாரங்களை முடுக்கி விடுவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் முனைப்புக் காட்டியது.



விடுதலை பெறத் துடிக்கும் தமிழ் மக்களின் எழுச்சியின் ஒரு காட்சி.

6 லட்சத்து 80 ஆயிரம் மக்கள் தொகையையும், 13 ஆயிரத்து 812 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் மட்டுமே கொண்ட மொன்ரநீக்றோ பிரிந்து செல்வதை 'சுயநிர்ணய உரிமை' (தன்னாட்சியுரிமை) என்ற கோட் பாட்டின் அடிப்படையில் ஐரோப் பிய ஒன்றியம் ஊக்குவித்தது, உதவியது, ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால், ஐந்தரை தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இன ஒடுக்குமுறை களுக்கும், இன அழிவுகளுக்கும் முகங் கொடுத்துள்ள, நியாயமான உரிமைகளுக் கான தேசிய விடுதலைப் பேராட்டத்தை முன்னெடுக்கின்ற தமிழீழ மக்களின் அபி லாசைகளுக்கெதிரான நிலைப்பாட்டையே ஐரோப்பிய சமூகம் எடுத்துள்ளது. (அதே போலத்தான் பலஸ்தீன மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட ஹமாஸ் அமைப்பை தனிமைப்படுத்தும் மேற்குலத்தின் நடவடிக்கை மூலம் பலஸ்தீன மக்கள் தண்டிக்கப்படுகின்றனர்) இங்குதான் மொன்ரநீக்றோ, தமிழீழம், பலஸ்தீனம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் மாறுபட்ட அணுகுமுறையினூடாக, அதன் இரட்டை நிலை வெளிப்படுகின்றது. அதன் பொருளாதார நலன்சார் மூலோபாயத்துக்குள் சுயநிர்ணய உரிமை பந்தாடப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் என்பது மக்களின் அரசியல் அபிலாசைகளை முன்நிறுத்திய ஒரு அமைப்பல்ல. ஒடுக்கு முறைக் குள்ளான மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கின்ற குறிக்கோளைக் கொண்ட அமைப்பல்ல. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் கீழைத்தேச நாடுகளின் மக்கள் அரசியல் உரிமைப் பிரச்சினைகளில் அக்கறை செலுத்திய வரலாறுகள் இல்லையென்றே சொல்ல வேண்டும். பொருளாதார நலன் ஒன்றே ஐரோப்பிய ஒன்றியத்தின் முதன்மை இலக்கு. அந்த நலன்களைப் பேணுவதற்கும், கட்டியெழுப்புவதற்குமுரிய மூலோபாய செல்நெறியேயே அது காய்களை நகர்த்துகின்றது.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் நலன்சார் மூலோபாயத் துக்குள் சிக்கித் தவித்த, அழிவுகளைச் சந்தித்த இன்னொரு தேசம், இந்தோனேசியாவுக்கும், அவுஸ்ரேலியாவுக் குமிடையில் அமைந்துள்ள கிழக்குத் திமோர் ஆகும். கிழக்குத் திமோர் நிலைமைகளை எடுத்து நோக்குவோமாயின் 1990 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்கு முன்னர் அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகியன இந்தோனேசிய இராணுவத்துக்கு ஆயுத உதவிகளை வழங்கி இந்தோனேசிய விடுதலைப் போராட்டத்தை அழிக்கும் நடவடிக்கைக்கு துணை நின்றன.

தென்கிழக்காசியாவில் சோவியத் ஒன்றியம் தளம் அமைப்பதைத் தடுப்பதற்கு இந்தோனேசியாவை தனது செல்வாக்கின் கீழ் வைத்திருத்தல் என்ற பிராந்திய நலன்சார் மூலோபாயத்தின் அடிப்படையிலேயே அமெரிக்கா அன்று செயற்பட்டது.

அவுஸ்ரேலியாவுக்கும், கிழக்குத் திமோருக்கும் இடைப்பட்ட கடற்பிராந்தியத்தின் எண்ணெய் வளம் இதற்கான முழுமுதற் காரணியாகும். இந்த எண்ணெய் வளத்தைத் தனதாக்கிக் கொள்வதில் அவுஸ்ரேலியாவுக்கிருந்த நலனும் இங்கு முக்கியமானதாகும்.

சோவியத் ஒன்றியத்தின் உடைவுக்குப் பின்னர் ஒட்டுமொத்த நிலைமைகள் மாற்றமடைந்ததன் விளைவாக தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்குக்கான, அதாவது தளம் அமைத்தலுக்கான இடையூறுகளும், சவால்களும் நீக்கப்பட்டன. இந்த நிலையில் தான் கிழக்குத் திமோர் மக்களின் சுயநிர்ணய உரிமையை தீர்மானிப்பதற்கான கருத்து வாக்கெடுப்பு இறுதியில் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சாத்தியமாயிற்று.

இவ்வாறாக அனைத்துலக சமூகம் தனது நலன் என்ற மூலோபாய நோக்கு நிலையில் நின்று எவ்வாறு செயற்படுகின்றது, தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு எவ்வாறு பயங்கரவாத சாயம் பூசுகின்றது, அவை போராடும் மக்களினங்கள் மீது 'இறைமையுள்ள அரசு' என்ற அங்கீகாரத்துடன் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடும் அரசுகளுக்கு எவ்வாறு துணை போகின்றன என்பதற்கு வரலாற்றில் பல எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான (தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கெதிரான) ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடுகளும், தீர்மானங்களும் சாரமற்றவை, அவை ஆழமான ஆய்வுக்குட்படுத்தப்படாத, அதே வேளை மேலெழுந்த வாரியான எடுகோள்களுடன் எட்டப்பட்டுள்ள பாரபட்சமான முடிவுகளாகும்.

இலங்கைத் தீவில் நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற உண்மையான அக்கறை அனைத்துலக சமூகத்துக்கு இருப்பின், பாரபட்சமற்ற அணுகுமுறையை அனைத்துலக சமூகம் கையாளுதல் வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்துவதன் மூலம் 50 ஆண்டுகளுக்கு மேலான இனவாதத்துக்கெதிராக கட்டி வளர்க்கப்பட்ட தமிழ் மக்களின் விடுதலை வேணவாவையோ, தன்னாட்சி உரிமையையோ மழுங்கடிக்க முடியாது.

தமிழ் மக்களை நம்பியே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை புலிகள் முன்னெடுத்தனர். கெரில்லாப் போராட்டமாக ஆரம்பித்து, மக்கள் மயப்பட்டு இன்று சர்வ தேசமயப்பட்டுள்ள போராட்டத்தின் ஆதார சக்திகளாக மக்களே விளங்குகின்றனர். இவ்வாறான தடைகள் மூலம் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நலிவடையச் செய்ய முடியாது. தமிழர் பால் அரைகுறைத் தீர்வுகளைத் திணிக்க முடியாது.

ரூபன் சிவராஜா

(நன்றி இணையத்தளம்)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமாழி காட்டி விடும்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# சர்வகட்சி மாநாடு

சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டு மக்களை மட்டுமன்றி, சர்வ தேசத்தையே ஏமாற்றிக்கொண்டிருக்கிறது.

நேற்று 6ஆவது தடவையாக சர்வகட்சி மாநாடு கூடியது. முன்னர் இந்தச் சர்வகட்சி மாநாடு – 'பிரிக்க முடியாத நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கம்' என்ற பொருளில் இடம்பெறும் என்றே அழைப்பு அனுப்பப் பட்டிருந்தது.

ஆனால், பிரிக்கப்படாத நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கம் என்பது சமஷ்டியையே குறிப்பிடுவதாக வும், இதனால் சர்வகட்சி மாநாட்டில் தாம் பங்கேற்க முடியாது என்றும் ஜே.வி.பி அறிவித்தது.

இதையடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பி பொதுச் செயலர் ரில்வின் சில்வாவுடன் தொலைபேசி மூலம் பேச்சு நடத்தி 'இனப்பிரச்சி னைக்கான இறுதித் தீர்வு' குறித்து ஆராய்வதற்கான கூட்டம் என்று சர்வகட்சி மாநாட்டின் தொனிப்பொரு ளையே மாற்ற இணங்கினார்.

சர்வகட்சி மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கம் என்ற தொனிப்பொருளில் ஆலோசனை நடத்தப்படு வதையே ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பியும் –

ஜே.வி.பிக்காக சர்வகட்சி மாநாட்டின் தொனிப் பொருளையே மாற்றுகின்ற ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவும் இந்த நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டு வருவார்களா?

சர்வகட்சி மாநாடு என்ற பெயரில் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ இதுவரை நடத்தியுள்ள 6 கூட்டங்களின் மூலம் ஏதாவது உருப்படியான தீர்வு காணப்பட்டதா?

மிக முக்கியமான தருணங்களில் சர்வகட்சி மாநாட் டைக் கூட்டி – அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட் டைப் பெற்றுக்கொண்டுதான் முடிவுகளை எடுப்பதாக சர்வதேச சமூகத்துக்கு காட்டிவருகிறார் மகிந்த ராஜ பக்ஷ.

ஆனால், சர்வகட்சிகளினதும் கருத்துக்களை அரசின் நடவடிக்கைகள் ஒருபோதும் பிரதிபலிக்க வில்லை. இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளும் சரி, சர்வதேச சமூகமும் சரி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத் தின் சர்வகட்சி மாநாடு என்ற மாய வலைக்குள் சிக்கிப்போயிருக்கின்றன.

நேற்று நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டு தொனிப் பொருளை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம் – 'இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு'

இப்போது இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு காணப்படக்கூடிய தருணமா நாட்டில் இருக்கிறது? ரோமாபுரி எரிந்துகொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தானாம்.

அதுபோலத்தான் நாடு போருக்குள் மூழ்கிக் கொண்டிருக்க – சர்வகட்சிக் கூட்டத்தில் இறுதித் தீர்வு குறித்து மகிந்த ராஜபக்ஷ ஆராய்கிறார். இப்படியான கூட்டங்களை நடத்துவதன் மூலம் – தான் சமாதான முயற்சிகளில் பற்றுறுதியுடன் செயற்படுவதாகக் காட்டவே மகிந்த ராஜபக்ஷ முனைகிறார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒன்றும் சுலபமான விடயமல்ல. அதன் ஆழ அகலம் கொஞ்ச நஞ்சமல்ல.

ரணில் அரசுடன் நடத்தப்பட்ட 6 கட்டப் பேச்சுக்களி லும் சரி, மகிந்த அரசுடன் ஜெனிவாவில் நடத்தப்பட்ட பேச்சுக்களிலும் சரி நடைமுறைப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை.

இவையே இறுதித் தீர்வு நோக்கி நகராத நிலையில் – புலிகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு சர்வகட்சி மாநாட்டில் இறுதித் தீர்வு பற்றி ஆராயப்படுகிறது.

தமிழ் மக்களின் தரப்பில் பேசும் சக்தியாக இருக்கும் விடுதலைப் புலிகளை சர்வதேசத்தின் முன் பயங்கர வாதிகளாக்கிவிட்டு – தான் நினைத்த ஒரு தீர்வை இறுதித் தீர்வென்று பிரகடனப்படுத்த மகிந்த நினைக் கிறாரோ தெரியவில்லை.


ஆனால், சர்வகட்சி மாநாடுகள் என்பது கடந்த காலத்தில் ஜே.ஆர் வட்டமேசை மாநாடு என்றும், பிரே மதாஸ சர்வகட்சிக் கூட்டமென்றும் ஏமாற்றியதன் தொடர்ச்சியே தவிர, வேறொன்றுமில்லை.

அதுபோல இனப்பிரச்சினைத் தீர்வு என்பது புலிகள் பங்கேற்காத கூட்டம் ஒன்றின் மூலம் ஏற்படுத்தப் படுத்தப்படுமென மகிந்த ராஜபக்ஷ கனவு கண்டால் அவர் சர்வதேசத்தின் முன்னால் தனக்குத் தானே கோமாளி வேடம் போடுகிறார் என்றுதான் அர்த்தம்.

சர்வகட்சி மாநாட்டின் மூலம் இதுவரை நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றியதுபோல – இறுதித் தீர்வு விடயத்திலும் நடக்கும் என்றால் அது வெறும் கனவாகவே இருக்கும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# மொண்டி நீக்ரோ மக்களின் உரிமை ஈழத் தமிழர்களுக்கு இல்லையா?

## கவிஞர் அறிவுமதி கேள்வி



சென்னை –

ஒரு நாட்டோடு சேர்ந்து வாழ்வதா? பிரிந்து செல்வதா என்பதை தீர்மானிக் கும் உரிமைமொண்டி நீக்ரோ நாட்டு மக்களுக்கு உள்ளபோது ஈழத் தமிழர்க ளுக்கு அது இல்லையா? என்று சென் னையில் கடந்த வியாழக்கிழமை நடை பெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட் டில் தமிழ் உணர்வாளர் அறிவுமதி கேள்வியெழுப்பியுள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் மக்கள் பண் பாட்டு விழுமியங்களை உணர்ந்தவர் கள். சுனாமியின் போதே அதை உறுதி செய்தவர்கள். உலக நாடுகளில் எந்த இனத்தவர் கூடி மாநாடு நடத்தினாலும், வன்முறையில் முடியும். ஆனால், தமிழர்கள் அமைதி வழியில்தான் கூட்டங்களை நடத்தி முடிக்கின்றனர்.

இலங்கையின் வன்முறைகளால் படகுகளில் ஏறும் நம் உறவுகளின் உடை மைகள் மட்டுமே இங்கே வருகின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நியாய மற்ற பக்கச்சார்பான தீர்மானத்தால் ஒருபுறம் வேதனையும், மறுபுறம் சின மும் அடைந்திருக்கும் புலம்பெயர் தமி ழர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் அவர்கள் தலைமையில் முன்னெ டுக்கப்படும் தேச விடுதலைப் போராட்டத் துக்கும் முன்னரைவிட தற்போது தீவிர மான ஆதரவையும், பொருளாதார உதவிகளையும் அள்ளி வழங்கி இந்தத் தடைகளை முறியடிப்பார்கள் என்பது திண்ணம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்கிறீர்கள். இங்கே உள்ள சில ஊடகங்கள் விடுதலைப் புலிகளோடு மட்டும் பேசக்கூடாது. வேறு சிலரோடு பேச வேண்டும் என்கிறார்கள்.

உங்கள் கருத்தை ஏற்கிறோம்.

யாரோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று நீங்கள் ஈழத்தமிழர் களிடத்தில் வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்யுங்கள். கடந்த தேர்தலில் தங்கள் தலைவன் மௌனமாக இருந்ததன் உள் அர்த்தம் புரிந்து வாக்களிக்காம லேயே தீர்ப்பைச் சொன்னவர்கள் தமிழ் மக்கள். அவர்கள் தீர்ப்பளிப்பார்கள்.

ஒரு சிங்கள மருத்துவரான பிறை யன் செனிவிரட்னவே கூறுகிறார்.

தமிழீழம் என்பது ஈழத் தமிழர்கள் உருவாக்கியது அல்ல. சிங்களப் பேரின வாதிகள் உருவாக்கியது.

புலிகள் பிரச்சினைக்குக் காரணமா னவர்கள் அல்லர். பிரச்சினையைத் தீர்க்க முடியாததன் விளைவாக உருவா னவர்கள்.

100இற்கு 90 வீதமான சிங்களவரை மட்டுமே கொண்ட இராணுவத்தின் கொடுமைகளுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆளான தமிழர்கள். இந் தக் கொடிய ஆட்சியில் இருந்து விடு தலைபெற விரும்புகிறார்கள்.

மீண்டும் போர் மூண்டாலும், பிரிட் டனும் மற்ற நாடுகளும் ஏராளமான ஆயுதங்களை விற்று ஆதாயமடைவார் கள். ஆனால், இலங்கையில் ஏற்படும் அழிவுக்கு யாரும் பதில் சொல்ல முடி யாது என்கிறார்.

ஒரு விடுதலைப் போராட்டம் நடக் கும் காலத்தில் யார் பிரதிநிதி என்பதை அந்த மக்களே முடிவு செய்வார்கள். இன்னொரு நாடோ அல்லது வேறு சில நாடுகளோ முடிவு செய்ய முடியாது.

தமிழர் பிரச்சினை குறித்து பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு உண்டா? இல்லையா? என்று ஈழத் திலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடத்தில் வாக்கெடுப்பு நடத்த ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்கா வும் தயாரா?

60ஆண்டுகாலம் ஒன்றுபட்ட இலங் கைக்குள் வாழ்ந்தவர்கள்தானே தமிழர் கள் - அந்தக் கொடுமையைத் தாங் காமல்தானே தனிநாட்டுக்காகப் போரா டத் தொடங்கினார்கள்.

1990ஆம் ஆண்டு வரை யூகோஸ் லாவியா என்ற பெயரில் 6 நாடுகள் சேர்ந்திருந்தன. பின்னர் ஸ்லோவே னியா, குரோசியா, மசடோனியா, பொஸ்னியா, ஹெஸ்கோவினா என ஒவ்வொன்றாகப் பிரிந்து போயின. இறுதியாக மொண்டி நீக்ரோ மற்றும் சேர்பிய நாடுகள் இணைந்து ஒரு கூட்ட மைப்பாக விளங்கின.

சேர்பியாவிடமிருந்து பிரிந்து தனி நாடாக செல்ல மொண்டி நீக்ரோ விரும் பியது. மே மாதம் அந்த மக்களிடத்தில் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. 50 வீதத் துக்கும் மேற்பட்டோர் சேர்பியாவிட மிருந்து பிரிந்து போக வேண்டும் என்ற கருத்துக்கு வாக்களித்தனர்.

ஐ.நா.சபையில் 193 ஆவது நாடாக இடம்பெறப்போகிறது மொண்டி நீக்ரோ. அந்த நாட்டின் மக்கள் தொகையோ 6 இலட்சத்து 50 ஆயிரம் பேர்தான்.

மொண்டி நீக்ரோ மக்களுக்கு உள்ள உரிமை ஈழத் தமிழர்களுக்குக் கிடை யாதா? ஜனநாயக முறையில் அதை தெரிவு செய்திருந்தால் விடுதலைப் புலிகள் ஏன் ஆயுதம் ஏந்துகிறார்கள்?

நீங்கள் ஈழத் தமிழரிடத்திலே வாக் கெடுப்பு நடத்துங்கள். ஐ.நா.சபையில் 194 ஆவது நாடாக தமிழீழமும் இணை யும் என்றார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலை வரும் சட்டசபை உறுப்பினருமான கோ.க.மணி தனதுரையில் –

சிங்கள அரசுக்கு இந்திய அரசாங் கம் எந்தவித உதவியும் எந்த வகையி லும் செய்யக்கூடாது என்பதற்காக மத்திய அரசாங்கத்தை நாம் வலியுறுத் துவோம். இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பாக இந்திய அரசு இருக்க வேண்டும் என்பதை எமது கட்சி தொடர் ந்து வலியுறுத்தும் என்றார்.

திராவிடர் கழகத்தலைவர் கி.வீர மணி தனதுரையில் –

இலங்கை இனப்பிரச்சினை அந்த நாட்டுக்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல. ஒவ்வொரு கண்டத்திலும் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்படுகிறது. தென் னாபிரிக்கா, அவுஸ்ரேலியா, நியூசி லாந்து போன்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கை இனப்பிரச்சினை யில் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

பிரிட்டன் நாடாளுமன்றம் முன்னால் பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கி யுள்ளனர். தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தற்போது குரல் எழுப்பி உள்ளோம். அரசியல் சார்பற்ற எங்களுடன் இணைந்தோ, இணையாமலோ இந்தப் பிரச்சினை யில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு தரவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினையில் தமிழக அரசுக்கு கூடுதல் பொறுப்பு உள்ளது. பொடா சட்டத்தில் கைதான சு.ப.வீரபாண்டியன், பழ.நெடுமாறன் போன்றவர்களுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டது. சட்டம் ரத்தான பின்பும் நிபந்தனை தொடர்கிறது. இதைக் களைய தமிழக முதல்வர் கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வங்காலையில் கிளைமோர்; சிப்பாய்பலி, இருவர் படுகாயம்!

## பெருமளவில் மக்கள் இடம்பெயர்வு

மன்னார்—

மன்னார் - வங்காலை நானாட்டான் வீதியில் நடத்தப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் சிப்பாய் கொல்லப்பட்டதுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

இராணுவ முகாமை அண்மித்த பஸ்திபுரியில் படையினரின் இருசக்கர உழவுஇயந்திரத்தை இலக்குவைத்து நேற்றுமுன்தினம் இரவு 7.35 மணியளவில் இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலைத் தொடர்ந்து படையினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் - லோரன்சியா வயது(12) என்ற சிறுமியும் அவரது தந்தை ஏ.அருள்நேசனும் (வயது42) படுகாயமடைந்தனர். ஆனால், அந்தப்பகுதியில் நிலைமை மோசமடைந்து இருந்தமையால் - நேற்றுக்காலை 6.50 மணிக்குத்தான் இருவரும் முருங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்

கிளைமோர்த் தாக்குதலை அடுத்து நறுவிலிக்குளம் பகுதியைச் சேர்ந்த சுகந்தபுரி, பஸ்திபுரி, சோமாஸ்புரி பகுதிகளில் படையினர் நடத்திய தொடர்தேடுதல் நடவடிக்கைகள் காரணமாக அந்தக் கிராமங்களின் 20 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் அகதிகளாக வெளியேறி வங்காலை புனித ஆன் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். (மோ)

# களுவன்கேணியில் கிளைமோர்; சிப்பாய் பலி, மூவர் படுகாயம்!

மட்டக்களப்பு—

வந்தாறுமூலை - களுவன்கேணி ரயில் நிலையத்துக்கு பின்புறம் நேற்று மதியம் 12.45 மணியளவில் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச்சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் திலகரட்ண (வயது 24) என்ற சிப்பாய் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

கடமையை முடித்த படையினர், ஓய்வெடுப்பதற்காக களுவன்கேணி ரயில் நிலை யத்தின் பின்புறம் உள்ள நிழலில் நின்றபோதே இந்தக் கிளைமோர் வெடித்தது.

### படையினர்...

புலிகளின் முன்னணி நிலைகள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

### ஒஸ்லோ மாநாட்டில்...

அரசாங்கமும், புலிகளும் முற்படுவார்களென நாம் நம்புகின்றோம். ஒஸ்லோ மாநாட்டில் பங்கு கொள்வதென்பது ஆரம்ப நிலையிலான நல்லதொரு அறிகுறியாகும்.

கடல் உரிமை என்பது இலங்கை அரசாங்கத்துக்கே உரியது. எனவே, இது தொடர்பாக விடுதலைப் புலிகள் ஒஸ்லோ மாநாட்டுக்கு முன்னர் முடிவெடுப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

### பதில்...

எதிர்ப்புத் தெரிவித்தது. இதை அடுத்து பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் நாட்டைவிட்டு குடும்பத்துடன் வெளியேறினார். இதனால் பல்கலைக்கழத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதையடுத்து நேற்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக செயற்குழு கூட்டத்தில் பேராசிரியர் குமாரவடிவேல் பதில் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார்.

### இனப்...

மன்றில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் கலந்து கொண்டன.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்துள்ள நிலையில் - இனிமேலும் நடைமுறைச் சாத்தியமான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கு தாமதிக்கக்கூடாதென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத்திட்டமொன்றை உருவாக்குவதெனவும் இங்கு முடிவுசெய்யப்பட்டது. இவ்வாறு உருவாக்கப்படும் தீர்வுத்திட்டம் விடுதலைப் புலிகளிடமும் பின்னர் மக்களிடமும் முன்வைக்கப்படும்.

இந்தத் தீர்வுத்திட்டத்தை வடிவமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் ஒன்றை உருவாக்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் குழுவுக்கு உதவுவென மேலதிகமாக சட்ட அரசியல் அரசியலமைப்பு நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அரசியல் கட்சிகளின் ஆலோசனையுடன் ஏற்படுத்துவதெனவும், அது அனைத்துக் கட்சிக்குழுவுக்கு துணையாக பணியாற்றுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

### பிரிட்டன்...

மரியாதை விமானப் படைத் தலைமையகத்தில் வழங்கப்பட்டது. அங்கு விமானப் படைத்தளபதி எயார் வைஸ் மார்சல் டொனால்ட் பெரேராவைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதேவேளை பிரித்தானியக் கடற்படைத்தளபதி, இலங்கைக் கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட, விமானப் படைத்தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஆகியோருடன் கலந்துரையாடியதுடன் - வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் மற்றும் பிரிட்டிஷ் கடற்படையின் ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பாகவும் பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தளபதி லெப் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கைக்கு வந்த முதலாவது பிரிட்டிஷ் கடற்படைத் தளபதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புலிகளுடன்...

விடுதலைப்புலிகளும் ஜெனிவாவில் நடைபெற்ற முதல்சுற்றுப் பேச்சை அடுத்து சமாதான முயற்சிகள் பெருமளவு பின்டைவுக்குச் சென்றமை குறித்தும், இரண்டு தரப்பினரும் ஒருவர்மீது ஒருவர் மாறி மாறி குற்றம் சாட்டியதால் - ஏப்ரல் மாதம் நடைபெறவிருந்த இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ரத்தானமை குறித்தும் நான் பெரும் ஏமாற்றம் அடைகிறேன்.

இலங்கை சமாதான முயற்சிகளின் அனுசரணையாளர்கள் என்ற வகையில் நாம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருப்போம்.

தற்போதைய நெருக்கடியான நிலையில் இரண்டு தரப்பினரையும் பேச்சுமேசைக்கு கொண்டு வருவதற்கு நாம் தொடர்ந்தும் எமது அனுசரணைப் பணியை மேற்கொள்வோம்.

அவர்கள் தீர்வைக் கண்டு பிடிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைமூலம் புலிகளின் இலக்கை தடுக்கமுடியாது!

## இந்திய கட்டுரையாளர் நாராயணசுவாமி தெரிவிப்பு

கொழும்பு—

ஐரோப்பிய ஒன்றியத் தடை மற்றும் இணைத்தலைமை நாடுகளின் எச்சரிக்கைகளால் விடுதலைப் புலிகளின் இலக்கான தமிழீழ அரசை அவர்கள் அடைவதை எவரும் தடுக்க முடியாதென இந்திய கட்டுரையாளர் எம்.ஆர் நாராயணசுவாமி தெரிவித்தார்.

இணையத்தளம் ஒன்றில் வெளியான இவரது கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஐரோப்பிய ஒன்றியத்தடையும், இணைத்தலைமை நாடுகளினது எச்சரிக்கையாலும் தமிழீழ விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாக இலங்கை அரசாங்கம் மகிழ்வாக கொண்டாடலாம். ஆனால், இவர்கள் எவராலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலக்கான தமிழீழ தனியரசு என்பதை அடைவதைத் தடுக்கமுடியாது.

வரலாற்றுரீதியாகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எதுவித அழுத்தங்களுக்கும் இணங்காதவர்.

எந்தவொரு அந்நிய சக்தியும் எமது மக்களை ஆதிக்கம் செலுத்தவோ, தலையிடவோ அனுமதிக்க மாட்டோம் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு பிரபாகரன் கூறினார்.

இன்றைய சூழ்நிலையில் இந்தியா, நோர்வே, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இது பொருந்தும்.

இந்தியாவும், அமெரிக்காவும் விடுதலை புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்திய போதும், விடுதலைப் புலிகள் எதனையும் விட்டுக் கொடுக்கவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையும் அப்படியானதே.

பல ஆண்டுகளுக்கு முன்னர் பிரபாகரன் இந்தியாவில் இருந்தபோது இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதை இந்தியா நிறுத்திவிட்டால் என்ன செய்வீர்கள் என கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பிரபாகரன் - இந்தியாவின் அனுதாபம் என்பது எங்களுக்கு தார்மீகரீதியாக ஊக்கம் அளிக்கக்கூடியது. இந்தியா ஆதரவளிக்கவில்லை என்பதற்காக எமது விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்துவிடாது. இந்தியாவின் ஆதரவுடனோ அல்லது வேறு எந்தவொரு அந்நிய சக்திகளினது ஆதரவுடனோ எமது விடுதலைப் போராட்டத்தை நாம் தொடங்கவில்லை.

நாங்கள் சாகும்வரை போராடுவோம். நான் இறந்து போனால் மற்றொருவர் அந்தப் பொறுப்பை ஏற்பார். எமது தலைமுறையில் எம் விடுதலையை வென்றெடுக்காது போனால் - அடுத்த தலைமுறையும் இதே போராட்டத்தைத் தொடரும் என்றார் என அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போராளி வீரச்சாவு

வவுனியா—

வவுனியா - காயாங்குளத்தில் நேற்றுமுன்தினம் படையினர் நடத்திய திடீர் தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

...ட்டன் தமிழ்மதி என்று அழைக்கப்படும் வைரவர் கோவில் அருகாமை பரந்தன் கிளிநொச்சியை சொந்த முகவரியாகவும், ...நகர் கிழக்கு உதயநகர் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட இராஜரத்தினம் ஆதவன் என்ற போராளியே வீரச்சாவடைந்தவராவார்.

இந்த மாவீரருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### கிளாலியில் சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்—

கிளாலி முன்னரங்கப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 2.35 மணியளவில் கண்ணிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாக ராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாயே இவ்வாறு கண்ணிவெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

### கிரனேட் வீச்சில் வயோதிபர் பலி

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - புதூர் பிரதேசத்தில் வீடொன்றின்மீது நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட கிரனேட் வீச்சில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இராசையா கணேசன் (வயது56) என்பவரே உயிரிழந்தவராவார். இவரின் சடலம் பிரேத பரிசோத னைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

Fast Track @ AIMS
பத்திரிகைகளில் பக்க வடிவமைப்பாளர் மற்றும் விளம்பர வடிவமைப்பாளராக வர நீங்கள் தயாரா?
Graphic Designing & Publishing
❄ PageMaker, PhotoShop, CorelDraw
❄ Designing & Publishing Techniques
Duration: 20 Days
Start on: 05-06-06
பிரபல நிறுவனமொன்றில் வேலை வாய்ப்பு மற்றும் மேலதிக பயிற்சி வழங்கப்படும்
மேலதிக விபரங்களுக்கு
Drictor,
# 118, Palaly Road,
Thirunelvely.
AIMS Your Training Partner
Center for FOSS & LAMP

### மத்திய வங்கி ஆளுனர் பதவி விலகினார்

கொழும்பு—

இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் சுனில் மென்டிஸ் தனது பதவிவிலகல் கடிதத்தை கடந்த முதலாம்திகதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காகவே தனது பதவியிலிருந்து விலகுவதாக அவர் தனது கடிதத்தில் தெரி வித்துள்ளார்.

இவரின் பதவி விலகல் கடிதத்தை உறுதி செய்துள்ள நிதியமைச்சின் செயலாளர் பி.பி ஜயசுந்தர - அவர் தனிப்பட்ட காரணங்களுக்காகவே பதவியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தார்.

### புலிகளின்...

மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு படையினர் காயமடைந்ததாக படைத்தரப்பு செய்திகள் தெரிவித்தன.

### ஒஸ்லோ...

இதேவேளை இந்த மாநாட்டில் பங்குபற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் நாளை கொழும்பு செல்வர் எனவும் இவர்களை விசேட ஹெலிகொப்டர் மூலம் அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வே தூதரக தகவல்கள் தெரிவித்தன.

### கைதடிச் சந்தியில் கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்—

கைதடி - கோப்பாய் வீதியில் கைதடிச் சந்திக்கு அண்மையில் வீதிப்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்றுக் காலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

காலை 9 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து படையினர் கடுமையான சோதனை கெடுபிடிகளை மேற்கொண்டதுடன், அந்த வீதியூடான போக்குவரத்தை அரை மணிநேரம் வரை தடை செய்தனர்.

### பாரிய அரசியல்...

நாம் மனிதாபிமான உதவிகள் குறித்துப் பேசவில்லை. அது எப்போதும் நடைபெறும். முன்னைய நிலைமைகளிலிருந்து எதுவித மாற்றத்தையும் வெளிப்படுத்தாது இருந்தால் இந்தத் தீவு முழுமையாக சர்வதேச சமூகத்திடமிருந்து விலகிநிற்கும்.

மனிதஉரிமைப் பிரச்சினைகளுக்கு இலங்கை அரசாங்கம் முகம்கொடுக்காது போனால், இலங்கைக்கான அனைத்து இணைத் தலைமை நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் இலங்கைக்கான இராணுவ உதவிகளை நிறுத்திவிடும்.

அமெரிக்கா தனது இராணுவ உதவியை மட்டுப்படுத்திய அளவிலேயே செய்துவருகிறது. எமது நாட்டின் சட்டங்களைச் செயற்படுத்தினால் எத்தகைய எதிர்விளைவு கள் நிகழும் என்பதைத்தான் இது காட்டுகிறது.

சமாதானத்தை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் சேர்ப்பது முக்கியமானது.

தடை என்பது எதற்காக எனில், அரசாங்கத்திடமிருந்து எதை நாம் எதிர்பார்க்கிறோமோ அதை விடுதலைப் புலிகள் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்பதுதான்.

இருதரப்பும் நடைமுறையில் எதுவித தீர்வுக்கும் முன்வராத நிலையில் - இணைத்தலைமை நாடுகள் உட்கார்ந்துகொண்டு தமது பணியைச் செய்ய இயலாது. இந்தச் செய்தியின் உள்ளடக்கம் புரிந்துகொள்ளப்படும் என்று நான் நினைக்கவில்லை. எந்தவொரு காலக்கெடுவும் விதிக்கப்படவில்லை.

இலங்கை - யுத்தத்தில் மூழ்கும்போது சர்வதேசத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டுவிடும். தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு பட்டியலில் சேர்ப்பதை விட இது முக்கியமானது.

மகிந்த ராஜபக்ஷ ஏசியன் வோல் ஸ்ரீட் ஜேர்னல் இதழுக்கு வழங்கிய பேட்டியில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகள் போதுமானவை இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியமும், இணைத்தலைமை நாடுகளும் கருதுகின்றன.

சர்வதேச சமூகத்தினது தற்போதைய நிலையை சாதகமாக்கிக் கொண்டு, சமாதான முயற்சிகளில் குறிப்பிடத்தக்க நகர்வை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் பாரிய அரசியல் மாற்றத்தையே நாம் எதிர்பார்க்கிறோம். அத்தகைய நிலையில் அரசியல் சிக்கல்களுக்கு மகிந்த ராஜபக்ஷ முகம்கொடுக்க வேண்டும். மகிந்தவின் முடிவை குடிசார் நிர்வாகப் பணியாளர்கள் வெளிப்படுத்த முனைகின்றபோது - அரசியலிலும் அது எதிரொலிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

REERDO
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளைத் தினந்தோறும் பாடசாலைக்கு அனுப்பிவையுங்கள்
"வாழ்க்கையின் திறவுகோல் கல்வி..."
பெற்றோர்களே சிந்தியுங்கள்!
Unicef
குளப்பிட்டி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை,
REERDO
[C/5359]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.